**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.90/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.1(சக்கரபாணி)**
**11.07.2025**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. நான் 10ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எந்த வருடம் துப்பாக்கி தொழிற்சாலையில் வேலைக்கு சேர்ந்தேன் என்றால் 1965ஆம் ஆண்டு வேலைக்கு சேர்ந்து 2000ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றேன்.

2. எனது சொந்த ஊர் ஸ்ரீரங்கம் ஆகும். நான் 1965ல் வேலைக்கு சேர்ந்தது முதல் பணி ஓய்வு பெறும் வரை துப்பாக்கி தொழிற்சாலை குடியிருப்பில் குடியிருந்தேன். சாட்சி பின்னிட்டு தாவா சொத்தில் குடிசை வீடு கட்டி 1974 முதல் 1977 வரை குடியிருந்தேன்.

3. எனக்கு 2 மகன்கள், 1 மகள் உள்ளனர். 1974 முதல் 1977 வரை வீடு கட்டி தாவா சொத்தில் குடியிருந்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. 1973ல் மனை வாங்குவதற்கு எங்கள் அலுவலகத்தில் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் வாங்கிய மனை வரன்முறை படுத்தப்பட்ட மனையா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. தாவா சொத்திற்கும், எனது அலுவலகத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் 5, 6 கி.மீ தூரம் இருக்கும்.

6. எனது பிள்ளைகள் எங்கு படித்தார்கள் என்றால் துப்பாக்கி தொழிற்சாலையில் உள்ள பள்ளியில் படித்தார்கள்.

7. அவர்கள் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்தார்கள். 1974 முதல் 1977 வரை எனது பிள்ளைகள் துப்பாக்கி தொழிற்சாலையில் உள்ள பள்ளியில் தான் படித்தார்கள். அவர்கள் என்ன படித்தார்கள் என்று ஞாபகம் இல்லை.

8. 1977ல் எனக்கு விபத்து ஏற்பட்டது என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

9. தாவா சொத்தை விற்று தருவதாகவும், அதற்கு கமிஷன் கேட்டதாகவும் சொல்லியுள்ளது எந்த ஆண்டு என்றால் 1977க்கு பிறகு 2 ஆண்டுகள் கழித்து இருக்கும். 1977 க்கு பிறகு 2 ஆண்டுகள் கழித்து இவ்வழக்கு தாக்கல் செய்யும் காலம் வரை தாவா சொத்தை விற்பதற்கு முயற்சி எடுத்து விற்க முடியவில்லை என்றால் சரிதான்.

10. பொதுவாக ஒரு சொத்திற்கு பதிவு துறை மற்றும் வருவாய் துறை ஆவணம் இருக்க வேண்டும் என்றால் சரிதான். லோன் வாங்கவேண்டும் என்றால் ஒரு சொத்திற்கு பதிவு துறை மற்றும் வருவாய் துறை ஆவணம் இருந்தால் தான் லோன் கொடுப்பார்கள் என்றால் சரிதான்.

11. நான் பணி ஓய்விற்கு பிறகு 2010ஆம் ஆண்டு வரை எங்கு வசித்தேன் என்றால் போலீஸ் காலணி அண்ணா நகரில் உள்ள சொந்த வீட்டில் வசித்தேன். அந்த வீட்டிற்கும், தாவா சொத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 5,6 கி.மீ தூரம் இருக்கும்.

12. 2010ஆம் ஆண்டிற்கு பிறகு எங்கு வசித்தேன் என்றால் கோயம்புத்தூருக்கு எனது மகன் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அங்கு 9 ஆண்டுகள் இருந்தேன் என்றால் சரிதான்.

13. 9 ஆண்டுகள் கழித்து 2019ஆம் ஆண்டு எனது மருமகன் விபத்தில் இறந்துவிட்டார். அவரது குடும்பத்தையும், எனது குடும்பத்தையும் பார்த்து கொள்வதற்காக அண்ணா நகருக்கு வந்துவிட்டேன்.

14. எனது ஒரு மகன் தனியார் கம்பெனியிலும், மற்றொரு மகன் இன்சூரன்ஸ் கம்பெனியில் ஏஜெண்ட்டாக வேலை பார்த்து வருகிறார்கள். எனது மகள் வேலைக்கு செல்லவில்லை.

15. 1979 முதல் தாவா சொத்தை என்னால் விற்க முடியவில்லை என்பதால் எனது பிள்ளைகள் மூலமாக விற்பனை செய்ய முயற்சி செய்தேனா என்றால் இல்லை.

16. தாவா சொத்திற்கு பட்டா பெற்றுள்ளேனா என்றால் மனு கொடுத்தேன், இதுவரை பெறவில்லை.

17. நான் பட்டா கேட்டு கொடுத்த மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

18. பட்டா கேட்டு நான் சொத்து வாங்கிய காலம் முதல் மனு கொடுத்து வருகிறேன் என்றால் சரிதான். நான் சொத்தை வாங்கிய பிறகு அரசுக்கு பாத்தியப்பட்டது என நான் கிரையம் வாங்கியதில் இருந்து எவ்வளவு நாட்களில் தெரியும் என்றால் 10 வருடங்களில் தெரியும், சாட்சி மீண்டும் சமீபத்தில் தான் தெரியும் என கூறுகிறார்.

19. 2000ஆம் ஆண்டிற்கு முன்பு பட்டா தொடர்பாக நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

20. வட்டாட்சியர் தவறு செய்துவிட்டதாகவும், அதுதொடர்பாக மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை கொடுத்துள்ளதாக வட்டாட்சியர் சொன்னார்.

21. எனக்கு பட்டா வழங்க சொல்லி வட்டாட்சியர் குறிப்பிட்ட சர்வே எண் என்னவென்றால் சர்வே எண் 1/90 ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் வட்டாட்சியர் கொடுத்த அறிக்கை என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

22. வழக்கு சொத்து விவரத்தில் சர்வே எண் என்ன குறிப்பிட்டுள்ளேன் என்றால் 1/1 என குறிப்பிட்டுள்ளேன். எனது வழக்குரையில் சர்வே எண் 1/90 குறிப்பிடவில்லை என்றால் இல்லை. பின்னிட்டு உட்பிரிவு செய்யப்பட்டதில் சர்வே எண் 1/90 வழங்கப்பட்டது.

23. தாவா சொத்தை விற்பது தொடர்பாக 2010ஆம் ஆண்டிற்கு பிறகு 1ஆம் பிரதிவாதியிடம் பேசினேனா என்றால் இல்லை. கடைசியாக 2019ஆம் ஆண்டிற்கு பிறகு தான் பேசினேன். அதற்கு முன்பு பேசவில்லை.

24. பொதுவாக லோன் பெறுவதற்கு பட்டா பத்திரம் வேண்டும் என்று சொன்னால் சரிதான். 60 வயதிற்கு மேல் பொதுவாக லோன் தரமாட்டார்கள் என்றால் சரிதான்.

25. 2019ஆம் ஆண்டு தாவா சொத்திற்கான பத்திரத்தை 1ஆம் பிரதிவாதியிடம் கொடுத்து தனியார் வங்கியில் லோன் பெற சொன்னேன். லோன் பெற்றோமா என்றால் இல்லை, பேருந்தில் சென்றபோது பத்திரம் தொலைந்துவிட்டது. விமான நிலைய காவல்நிலையத்தில் பத்திரம் தொலைந்தது தொடர்பாக புகார் கொடுத்தேன். போலிசார் என்னையும் முருகேசனையும் விசாரித்தார்களா என்றால் முருகேசனை விசாரிக்கவில்லை.

26. அந்த பத்திரம் தொலைந்தபிறகு தான் நகல் போட்டு வாங்கினேன் என்றால் சரிதான். அந்த நகல் ஆவணத்தை தான் வா.சா.ஆ.3ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

27.எனக்கு புதிய சர்வே எண் 1/90ல் தான் பட்டா கேட்டுள்ளேன். வேறு சர்வே எண்ணில் எனக்கு தொடர்பு இல்லை என்றால் சரிதான். எனது மனைவி பெயருக்கு வா.சா.ஆ.4 தானசெட்டில்மென்ட் எழுதி வைத்தபோது தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் அரசு புஞ்சை தரிசு என இருந்தது.

28. 2010 முதல் 2019 வரை முருகேசனிடம் எவ்வித பேச்சுவார்த்தையும் இல்லை என்றால் சரிதான்.

29. தாவா சொத்தில் உள்ள கட்டிடம் 30-40 வருடங்கள் உள்ள கட்டிடம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வீட்டிற்கு மின் இணைப்பு மற்றும் வீட்டு வரி ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றால் எனது வீட்டிற்கு அவர்கள் பெயரில் தவறாக வழங்கப்பட்டுள்ளது.

30. நான் 2019ல் எனது மனைவி பெயருக்கு தானசெட்டில்மென்ட் எழுதும்போது தாவா சொத்தில் வீடு இருந்தது என்றால் அப்போது நான் தாவா சொத்தை பார்க்கவில்லை.

31. எனது வீட்டில் இருந்து கீரனூர் பத்திர அலுவலகத்திற்கு எந்த வழியாக வந்தேன் என்றால் சூரியூர் பாதை வழியாக வந்தேன். மீண்டும் பத்திர அலுவலகத்தில் இருந்து வீட்டிற்கு செல்லும்போது பார்க்கையில் தாவா சொத்தில் வீடு இருந்தது. அதுசம்மந்தமாக பிரதிவாதிகளிடம் கேட்டபோது அவர்களிடம் பட்டா உள்ளது என்றும், முடிந்ததை பார்த்துகொள்ளுங்கள் என்று கூறிவிட்டார்கள்.

32. அதன் பிறகு அவர்களிடம் பஞ்சாயத்து எதுவும் பேசினேனா என்றால் இல்லை. அவர்கள் எனக்கு பணம் எதுவும் தருவதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

33. ஒரு சொத்தை கிரையம் பெறும்போது சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டால் தான் அந்த கிரையம் முழுமைபெறும் என்றால் சரிதான். தாவா சொத்தின் அனுபவம் தற்சமயம் என் வசம் இல்லை என்றால் சரிதான்.

34. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. நான் கையெழுத்து தமிழில் போடுவேனா அல்லது ஆங்கிலத்தில் போடுவேனா என்றால் ஆங்கிலத்தில் தான் கையெழுத்து போடுவேன்.

35. எனது அலுவலகத்தில் நான் கையெழுத்து செய்த ஆவணங்களை பார்த்தால் நான் எந்த மொழியில் கையெழுத்து போடுவேன் என தெரியவரும் என்றால் சரிதான். எனது பணிப்பதிவேட்டை பார்த்தால் எனது கையெழுத்து தெரியவரும் என்றால் சரிதான். நான் சொத்து வாங்கிய ஆவணங்களை பார்த்தாலும் எனது கையெழுத்து தெரியவரும் என்றால் சரிதான்.

36. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 05.12.1973ஆம் தேதியில் கிரையம் வாங்கிய ஆவணம் என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

37. நான் சொல்வது போல் தாவா சொத்தை உரிமை ஆவணம் மூலம் உரிமை பெறவில்லை என்றும், அனுபவம் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

38. என்னிடம் காட்டப்படும் சர்வே எண் 1/92 க்கான கணினி பட்டாவில் 2ஆம் பிரதிவாதி பெயரில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் சர்வே எண் 1/93 க்கான கணினி பட்டாவில் 1ஆம் பிரதிவாதி பெயரில் உள்ளது. **மேற்கண்ட ஆவணங்கள் முறையே பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்கண்ட ஆவணங்களில் கண்ட சர்வே எண் சொத்துக்களுக்கும், எனக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான்.

39. சர்வே எண் 1/90 மற்றும் 1/1 ஆகியவை யார் பெயரில் உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்கள் 1/92 மற்றும் 1/93 ஆகியவை 1ஆம் பிரதிவாதியின் லெட்சுமணன் காலத்தில் இருந்து அவரது அனுபவத்தில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. லெட்சுமணன் காலத்திற்கு பிறகு அந்த சொத்தில் 1ஆம் பிரதிவாதி ஓட்டுவீடு கட்டி குடியிருந்தும், தற்போது தார்சு வீடு கட்டி குடியிருந்து கொண்டு முன்புறம் வணிக கடைகளுக்கு வாடகைக்கு விட்டுள்ளார் என்றும் சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

40. நான் 02.10.1991ஆம் தேதி 1ஆம் பிரதிவாதியை சந்தித்து அவர் வீடு கட்டி குடியிருந்து வரும் இடத்திற்கு எனது பெயரில் பத்திரம் ஏற்பட்டுவிட்டது என்றும், அது செல்லாத ஆவணம் என்றும் இருந்தாலும் வீண் பிரச்சனைகளை தவிர்ப்பதற்காக நான் கேட்ட ரூ.12,500/-ஐ எனக்கு கொடுத்துவிட்டு அசல் பத்திரத்தை 1ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டு அன்றைய தினம் தாவா சொத்து அரசு நிலம் என இருந்ததால் பதிவு செய்ய முடியாததால் என்னிடம் இருந்து பதிவு செய்யாத கிரைய ஆவணம் எழுதி வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல.

41. சர்வே எண் 1/92 மற்றும் சர்வே எண் 1/93 ஆகிய சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகளின் பூர்வீக சொத்துக்கள் என்றும், அந்த சொத்துக்களில் நான் எந்த காலத்திலும் அனுபவத்தில் இருந்தது இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஒம்/–திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.